

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மதுரையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்டோருக்கான YonexSunrise அகில இந்திய ஜூனியர் தரவரிசை இறகுப்பந்து போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி அவர்களின் பேத்தி வர்ணா பிரபு ஆனந்த் மற்றும் அவருடன் இணைந்து விளையாடிய மித்திலேஷ் பி. கிருஷ்ணன் ஆகியோர் நேற்று (30.10.2025) மதுரையில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.10.2025) மதுரையில், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பஹ்ரைனில் நடைபெற்ற 3 ஆவது ஆசிய இளையோர் விளையாட்டு தடகள போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீராங்கனை எட்வினா ஜேசனுக்கு நேற்று முன்தினம் (29.10.2025) 25.00 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 24.10.2025 முதல் 26.10.2025 வரை ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 விளையாட்டு வீரர், வீரங்கனைகளுக்கு நேற்று முன்தினம் (29.10.2025) தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 15.50 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கினார்.

### தடகளப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

# 8 விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.40.50 லட்சம் ஊக்கத் தொகை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக்.31 –

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டு தடகளப் போட்டி மற்றும் 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நேற்று முன்தினம் (29.10.2025) மொத்தம் 40.50 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கி, மேலும் பல பதக்கங்கள் வெல்ல வாழ்த்து தெரிவித்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 2025 அக்டோபர் 24 முதல் 26 வரை ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 110 மீட்டர் தடை தாண்டும் பேட்டி பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்க பதக்கம் வென்ற தடகள வீரர் ஆர்.மானவ் அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 100 மீட்டர் தடை தாண்டும் பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்ற தடகள வீராங்கனை கே.நந்தினி அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீட்டர் (கலப்பு) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 4x400 மீட்டர் (பெண்கள்) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 400 மீட்டர் பிரிவில் வெள்ளி பதக்கம் மற்றும் 400 மீட்டர் தடைதாண்டுதல் பிரிவில் வெண்கல பதக்கம் என 4 பதக்கங்கள் வென்ற ஒலிம்பா ஸ்டெஃபி அவர்களுக்கு 6,50,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீ (ஆண்கள்) ரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் எம்.ஷரன் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, டிரிபிள் ஜம்ப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் வி. தினேஷ் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, உயரம் தாண்டுதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீரர் ஆதர்ஷ் ராம் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை, நீளம் தாண்டுல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை பவானியாதவ் பகவ் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை என தடகள போட்டிகளில் பதக்கங்களை வென்ற 7 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 15.50 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் மற்றும் மெட்லிரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற எட்வினாஜேசன் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 20.00 லட்சம் மற்றும் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 5.00 லட்சம் என மொத்தம் 25,00,000 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இன்றைய தினம் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர் வீரங்கனைகளுக்கு மொத்தம் தொகை 40,50,000 ரூபாய்க்கான ஊக்கத் தொகை காசோலைகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் திருமதி.சி.லதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அடக்குமுறை சட்டங்களின்

# ஆதிக்கத்திலிருந்து நம்மக்களை மீட்டவர்!

## பசும்பொன் தேவர் திருமகனார் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, அக். 31 –

நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் மரியாதையைச் செலுத்திய பின்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**அடக்குமுறைச் சட்டங்களின் ஆதிக்கத்தில் இருந்து நம் மக்களை மீட்டு, நேதாஜி அவர்களின் நம்பிக்கைக்குரியவராக நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் எனது மரியாதையைச் செலுத்தினேன். மேலும் மதுரை தெப்பக்குளத்தில் மானம் காத்த மருதிருவர் திருவுருவச் சிலைக்கும் மலர் மாலை அணிவித்து வணங்கினேன்.**

**பசும்பொன்னில் மாபெரும் திருமண மண்டபம் கட்டப்படும் என்ற புதிய அறிவிப்பை வெளியிட்ட மனநிறைவுடன் சென்னைக்குத் திரும்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ‘திராவிட மாடல்’ அரசுக்கு அரசியல் உள்நோக்கத்தோடு

# களங்கம் கற்பிக்கும் முயற்சி எக்காலத்திலும் வெற்றி பெறாது!

## அமைச்சர் கே.என்.நேரு கண்டன அறிக்கை!

சென்னை, அக்.31 –

நகராட்சி நிர்வாகத் துறையின் மூலம் நிரப்பப்பட்ட நேரடி நியமனங்கள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் அறிக்கை வருமாறு :

திராவிட மாடல் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற அரசியல் உள்நோக்கத்தோடு, பல ஆண்டு காலத்திற்கு முந்தைய வங்கி வழக்கு ஒன்றினை தூசு தட்டி எடுத்து, அதனை ஊதிப் பெரிதாக்கும் முயற்சியில் தோற்றுப் போன ஒன்றிய அரசின் அமலாக்கத் துறை மேற்கொண்டுள்ள மேலும் ஒரு முயற்சி தான், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணி நியமனம் குறித்த நேற்றைய கடிதம்.



2011ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டு வரையுள்ள பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போதிய நியமனங்கள் செய்யப்படாமல், காலிப் பணியிடங்கள் அதிகமாகி நிர்வாகத்தை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்த நிலையில், 2019 பணியிடங்களை நேரடி நியமனம் மூலமாக நிரப்ப வேண்டும் என்பதற்காக, அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக கடந்த 2.2.2024 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பிற பணியிடங்களையும் சேர்த்து, 2,569 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

இப்பணியிடங்களை வெளிப்படையான, ஒளிவுமறைவற்ற முறையில் நிரப்புவதற்காக, தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுவதற்கென தனி யாக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு, அந்த இணையதளம் மூலமாக, 2 இலட்சத்து 499 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்பட்டு, விண்ணப்ப தாரர்களுக்கு இணையவழியில் நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக, 38 மாவட்டங்களில் உள்ள 591 மையங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. இந்த எழுத்துத் தேர்வுகள் அனைத்தும், அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக மதிப்பீடு செய்யப்பட்டு, எழுத்துத் தேர்வு முடிவுகளும் இணைய தளத்தில் 20.9.2024 அன்று வெளியிடப்பட்டன. நியாயமான முறையில் தேர்வுகள் நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதால், இந்தத் தேர்வில் கலந்து கொண்ட இலட்சக்கணக்கான விண்ணப்பதாரர்களிட மிருந்து ஒரு ஆட்சேபணை கூட பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, பல்வேறு பணியிடங்களுக்கு, பணித் தகுதியின் அடிப்படையில், அதிகாரிகளைக் கொண்ட தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பதவிகளுக்கு 13 தேர்வுக் குழுவினால் 7 ஆயிரத்து 272 தேர்வர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பும் நேர்முகத் தேர்வுகளும் நடத்தப்பட்டன. இந்த சான்றிதழ் சரிபார்ப்பும், நேர்முகத் தேர்வுகளும் முடிவுற்ற பின்னர், இறுதித் தேர்வு முடிவுகள் இணைய தளத்தில் வெளியிடப்பட்டு, மதிப்பெண் மற்றும் இடஒதுக்கீடு அடிப்படையிலும், கலந்தாய்வு முறையிலும், இறுதியாக 2,538 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இந்த நேரடி நியமனம் தொடர்பாக பல்வேறு வழக்குகளும், தடையாணைகளும் நிலுவையில் இருந்த நிலையில், கடந்த 4.7.2025 அன்று, அனைத்து தடைகளும் மாண்பமை உச்சநீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்ட நிலையில், இறுதித் தேர்வுப் பட்டியலும் வெளியிடப்பட்டது.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணியாணைகள் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. இத்தகைய ஒரு வரலாற்றுச் சாதனை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் நிகழ்த்தப்பட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், இதற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில், அமலாக்கத் துறை மூலமாக ஒன்றிய அரசு இத்தகைய அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இத்தேர்வுகளை முன்னின்று மிகச் சிறப்பாக நடத்திய அண்ணா பல்கலைக்கழகமானது, உலகில் தலைசிறந்த சுயாட்சி பல்கலைக்கழகங்களுள் ஒன்று என்பதையும், இப்பல்கலைக் கழகம் நேரடியாகவோ, மறை முகமாகவோ, நகராட்சி நிர்வாகத் துறை யின் எந்தவிதக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டது அல்ல என்பதையும் அனைவரும் அறிவார்கள். முந்தைய ஆட்சிக் காலத்திலும், அதாவது கடந்த 2012, 2013, 2014, 2015 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு பதவிகளுக்கு இதே அண்ணா பல்கலைக்கழகம் மூலமாகத் தான் தேர்வுகள் நடத்தப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். இந்நிலையில், கடந்த 2024ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வுகளில் மட்டும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவலர்கள் தலையிட்டதால் தவறுகள் நிகழ்ந்துள்ளன என்ற கூற்று நகைப்புக்குரியது.

இரண்டு இலட்சம் தேர்வர்கள் விண்ணப்பித்து, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதி, ஒளிவுமறைவற்ற முறையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு, இறுதியாக 2,538 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, சிறப்பாகப் பணிபுரிந்து வரும் நிலையில், இவ்வாறு களங்கம் கற்பிக்கும் முயற்சி எக்காலத்திலும் வெற்றி பெறாது. அரசியல் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவற்றை முறியடிக்கத் தேவையான அனைத்து சட்டபூர்வ நடவடிக்கை களையும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்கொள்ளும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு மறுப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### தாட்கோ மூலம் கண்ணகி நகரில்

# கபடிக்கு சிறப்பான பயிற்சி மையம்!

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத் துணைத் தலைவர் இமையம் தகவல்!

*சென்னை, அக். 31-*

29.10.2025 அன்று ஆணையத்தின் சார்பில் பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபடி போட்டியில், இந்திய அணியின் துணைத் தலைவராக சென்னை, கண்ணகி நகர் கார்த்திகா பங்கேற்று சிறப்பாக விளையாடி வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்று தாயகம் திரும்பியவருக்கு ஆணையத்தின் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஆணைய உறுப்பினர்கள் மூ.பொன் தோஸ், இளஞ்செழியன், கார்த்திகா, அவரது தாய், தந்தை மற்றும் பயிற்சியாளர் மற்றும் ஆணையத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர். உறுப்பினர் செல்வகுமார் வரவேற்புரையாற்றினார். ஆணையத்தின் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன், துணைத் தலைவர் எழுத்தாளர் இமையம் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். உறுப்பினர் முனைவர் சு.ஆனந்தராஜா நன்றியுரையாற்றினார்.

ஆணையத்தின் துணைத் தலைவர் எழுத்தாளர் இமையம் பேசும்போது, “கபடி விளையாட்டில் சிறப்பாக விளையாடி பெருமைக்குரிய வெற்றியை பெற்றிருக்கிற வீராங்கனை கார்த்திகா அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள். கபடி போட்டியில் தங்கம் வென்றுள்ள கார்த்திகா அவர்களை ஊக்குவிக்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் ரூ.25,00,000/- பரிசுத் தொகை வழங்கியுள்ளனர். கண்ணகி நகரில் கபடிக்கென்று சிறப்பான பயிற்சி மையம் தாட்கோ மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. வெற்றி பெறுவதற்கு உழைப்பு தான் முக்கியம். பொருளாதாரமோ, சாதியோ காரணமாக அமைவது இல்லை. தற்போது கார்த்திகா பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபடி போட்டியில், இந்திய அணிக்காக பங்கேற்று விருது பெற்றிருக்கிறார். அவர் வருகின்ற ஒலிம்பிக் போட்டியிலும் கபடி அணியில் சிறப்பாக விளையாடி தங்கம் வெல்ல வேண்டும்.

**தமிழ்நாட்டு விளையாட்டுத்துறை உலகளாவிய கவனம் பெற்றுள்ளது!**

துணை முதலமைச்சர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டு விளையாட்டுத் துறை உலகளாவிய கவனம் பெற்று வருகிறது. விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தேவையான பயிற்சிகளும், வசதிகளும் உலக அளவில் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு ஊக்கத் தொகையும், அரசு வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறைக்கு பொற்காலம்.

விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் என்றும் துணையாக இருப்பார்கள். கார்த்திகா அவர்களுக்கு ஒரு வீடும், அரசு வேலையும் வழங்க வேண்டும் என்று அவரது தாயாரும், பயிற்சியாளரும் கோரிக்கை வைத்தார்கள். இக்கோரிக்கையை நிறைவேற்ற அரசிடம் பேசுகிறேன். தமிழ்நாட்டின் பெருமையாக இருக்கிற கார்த்திகா தொடர்ந்து பல வெற்றிகளை பெற வேண்டும்” என்று வாழ்த்தினார்.

ஆணையத் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் வாழ்த்தி பேசும் போது, “இன்று தமிழ்நாடே கொண்டாடும் விளையாட்டு வீராங்கனையாக இருக்கும் கார்த்திகா தொடர்ந்து பல வெற்றிகளை பெற வேண்டும். விளையாட்டுப் பிரிவில் தங்க மங்கை பி.டி.உஷா அவர்களுக்குப் பிறகு, கார்த்திகா அவர்களும் தங்க மங்கையாக விளங்க வேண்டும். தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் தொடர்ந்து பெருமை சேர்க்க வேண்டும்” என்று வாழ்த்தினார்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தின் சார்பில் பஹ்ரைனில் தங்கப் பதக்கம் வென்ற கபடி வீராங்கனை கண்ணகி நகர் கார்த்திகாவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆணையத் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன், துணைத் தலைவர் எழுத்தாளர் இமையம் ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்தினர். உடன் ஆணைய உறுப்பினர்கள் உள்ளனர்.